**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC No.30/2024 |
| Deposition of Witness for | : | PW– 8 |
| Name and Age | : | திரு.கபிலன் (வயது 66) |
| Father / Husband Name | : | சின்னசாமி |
| Occupation | : | காவல் துணை கண்காணிப்பாளர் (ஒய்வு) |
| Village | : | சேலம் |
| Taluk | : | சேலம் |

**நாள்** – 09.03.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A1 absent PFA. A2 present.**

**PW– 8**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் காவல் துணைகண்காணிப்பாளராக பணிபுரிந்து தற்போது ஒய்வு பெற்று சேலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் 2013–ம் ஆண்டில் தருமபுரி மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். அப்போது 26.07.2013–ம் தேதி அலுவலகத்தில் பணிபுரிந்தபோது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற சிவா த/பெ. பெரியசாமி என்பவரது எழுத்து மூலமான புகாரை அறிவுரையின் பேரில் பார்வையிட்டு மாவட்ட குற்ற பிரிவு குற்ற எண்.35/2013 இதச பிரிவு 420, 465, 468 –ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். மேற்படி **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு விசாரணைக்காக சம்பவ இடம் சென்று சாட்சி 1 மற்றும் கிராம நிர்வாக அலுவர் அடையாளம் காட்டிய வழக்கில் தொடர்பு உடைய நிலத்தை பார்வையிட்டு சாட்சிகள் கலைசெல்வன், கிராம நிர்வாக அலுவலர், மற்றும் அம்பிகா, கிராம உதவியாளர் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி **மாதிரிவரைபடம் அ.சா.ஆ.18** குறியீடு செய்யப்படுகிறது. அதை தொடர்ந்து சாட்சிகள் சிவா, லட்சுமி, முனியப்பன், கமலேசன், கலைசெல்வன், அம்பிகா ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் விசாரணையில் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரிகளை 26.07.2013–ம் தேதி பகல் 12.30 மணிக்கு வெள்ளிசந்தை நான்கு ரோட்டில் இருந்த எதிரி தங்கவேல் என்பவரை சாட்சிகள் அடையாளம் காட்ட அவரை கைது செய்தும், பின்னர்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.03.09 18:09:32 +0530

மாரண்டஅள்ளி சென்று 13.00 மணிக்கு மாரண்டஅள்ளி பஸ் நிறுத்தம் அருகில் 1-வது எதிரி வள்ளி-யை கைது செய்து வழக்கு தொடர்பாக விபரங்களை தெரிவித்து எதிரிகளுடன் தருமபுரி நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவு சென்று நீதிமன்ற அடைப்பு கோரி உரிய அறிக்கையுடன் வழிக்காவல் மூலம் மாண்புமிகு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கு தொடர்பான நிலத்தின் வருவாய் துறை ஆவணங்கள் கோரி பாலக்கோடு வட்டாச்சியர் அவர்களுக்கும், பதிவு ஆவணங்கள் வேண்டி பாலக்கோடு சார் பதிவாளர் அவர்களுக்கும் கடிதம் அனுப்பினேன். பின்னர் 29.07.2013-ம் தேதி சாட்சி 1-க்கு பிரிவு 164 குவிமுச படி வாக்குமூலம் பதிவு செய்ய கோரி தருமபுரி, தலைமை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு வேண்டுக்கோள் கடிதம் அனுப்பி வைத்தேன். அதன் பேரில் சாட்சி1-க்கு குவிமுச பிரிவு 164-ன் படி பென்னாகரம், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் உத்தரவின் படி விசாரணை செய்யப்பட்டார். இந்த வழக்கு தொடர்பாக எதிரிகள் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஆவணம் பதிவு எண்.1303/2011 கிடைக்கப்பெறாததால் பாலக்கோடு சார் பதிவாளர் அவர்களுக்கு மேற்படி பதிவு ஆவணத்துடன் தொடர்ப்புடைய விரல் ரேகை பதிவு ஏடு (TIR Register) மாண்புமிகு நீதிமன்றத்தில் மூலம் பெற்று, மேற்படி எதிரிகளிடம் விரல் ரேகை பதிவு செய்து ஒப்பிடு செய்வதற்காக மாண்புமிகு நீதிமன்றத்தின் மூலம் சென்னை, ஒரு விரல் ரேகை பதிவு கூடத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கு தொடர்பாக கோரப்பட்ட ஆவணங்கள் பாலக்கோடு வட்டாச்சியர் மற்றும் கிராம நிர்வாக அலுவல் , பாலக்கோடு சார் பதிவாளர் ஆகியோர்களிமிருந்து கிடைக்கப்பெற்றதால் திரு. ராஜிகண்ணு, திருமதி. பழனியம்மாள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 12.02.2014-ம் தேதி முனியப்பன், கமலேசன், பின்னர் சாட்சி சிவா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன், 2014-ம் ஆண்டு டிசம்பர் மாதம் எனக்கு பணி மாறுதல் வழங்கப்பட்டதால் வழக்கு கோப்பினை அலுவலகத்தில் ஒப்புவித்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கு புகார் என்னிடம் நேரடியாக பெறவில்லை என்றால் சரிதான், தருமபுரி காவல் கண்காணிப்பாளரால் பெறபட்டு உத்தரவின் பேரில் எனக்கு வழங்கப்பட்டது. தருமபுரி காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்றால் புகாரில் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. புகாரை பெற்ற பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டு சம்பவ இடம் சென்றேன். பொதுவாக Civil சம்மந்தமாக புகார் பெறப்பட்டால் இரு தரப்பினருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு, விசாரணை மேற்கொள்ப்பட்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கு மோசடி வழக்கு என்பதால் அறிவிப்பு அனுப்பவில்லை., வழக்கு மோசடி வழக்கு என சாட்சிகளை விசாரிக்காமல் எவ்வாறு தெரிந்துக்கொண்டேன் என்றால் புகார் மனுவுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களுடன் தெரிந்துக்கொண்டேன். புகார் மனுவுடன் இணைக்கப்பட்ட

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.03.09 18:09:38 +0530

ஆவணங்களில் புகார்தாரர் பெயரில் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் இருந்ததா என்றால் இல்லை, புகாரிலே தான் வாரிசு அடிப்படையில் தனக்கு உரிமை உள்ளது என கூறியுள்ளார். புகார்தாரரும், எதிரி வள்ளியும் கணவன் மனைவி ஆவார்கள். சம்பவ இடம் சென்று நான் யாரை விசாரித்தேன் என்றால் சாட்சி சிவா, லட்சுமி மற்றும் முனியப்பன் ஆகியோரை விசாரித்தேன். பொதுவாக ஒரு ஆவணம் பதிவு செய்யும் போது பதிவு அலுவலர்கள் அது உண்மையான ஆவணம் என உறுதி செய்தபிறகே பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். வழக்கு பதிவு ஆவணம் எண்.1303/2011 சட்ட படி கட்டணம் செலுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, உரிய கட்டணம் செலுத்தியுள்ளார். பதிவு ஆவணம் மோசடியாக பதிவு செய்யப்பட்டது என புகார் பெற்றால் பதிவு செய்த அலுவலரை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பே விசாரிக்க வேண்டும் என்றால் சரியல்ல. 1–வது எதிரி வள்ளி தனது கணவர் புகார்தாரர் மீது ஜீவனாசம் வழக்கு, வரதட்சனை வன்கொடுமை வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் அதிலிருந்து தப்பிக்கவே புகார்தாரர் பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் அரசு அலுவலர்களை விசாரிக்கும் போது அறிவிப்பு கொடுக்க வேண்டும் என்றாலும், வழக்கில் அவ்வாறு கொடுக்கவில்லை என்றாலும், அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வில்லை என்றாலும், அறிவிப்பு அனுப்பவில்லை, ஆவணத்தின் உண்மை நகல் வேண்டி கடிதம் அனுப்பினேன். மேற்படி கடிதம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிலத்தின் வருவாய் ஆவணங்கள் எனது அதிகாரத்தின் தவறாக பயன்படுத்தி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கு புகாரை 26.07.2013–ம் தேதி பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கையில் 3–வது காலத்தில் A– உட்பிரிவில் 29.06.2016 என உள்ளது என்றால் சரியல்ல, 29.06.2011 என உள்ளது. எனது மேல் அதிகாரியின் உத்தரவின் படி புகாரின் உண்மை தன்மை விசாரிக்காமல் சம்பவ இடம் செல்லாமல், சாட்சிகளை விசாரிக்காமல், புகார்தாருக்கு ஆதரவாக வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது புலன் விசாரணையில் சட்ட படி விதிமுறைகளை பின்பற்ற வில்லை என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லியுள்ளது போல் எதிரிகள் எந்த குற்றங்களும் செய்யவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.03.09 18:09:46 +0530

Judicial Magistrate,
Palacode.